CLADDING SAFETY Victoria

# தீப்பாதுகாப்பில் ஒவ்வொருவருக்கும் பங்கு உள்ளது

உங்கள் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் எரியத்தக்க கிளாடிங் இருப்பதால் உங்கள் கட்டிடம் பாதுகாப்பற்றதாக இருக்கிறது என அர்த்தமில்லை. எனினும், எங்கேனும் தீப்பற்றிக் கொண்டால், எரியத்தக்க கிளாடிங்கானது நெருப்பு பரவுவதற்கு வழிவகுக்கலாம்.

நெருப்பின் அபாயத்தைக் குறைப்பதற்கும், உங்களை, உங்கள் அக்கம்பக்கத்தினரை, உங்கள் குடும்பத்தினரைப் பாதுகாப்பாக வைப்பதற்கும், நீங்கள் பின்பற்ற வேண்டிய சில எளிய படிகள் உள்ளன. **அவசரச் சூழலாக இருந்தால், 000ஐ (பூஜ்ஜியம் பூஜ்ஜியம் பூஜ்ஜியம்) அழைக்கவும்.**

பால்கனிகளில் புகைப்பிடிக்க வேண்டாம்

பால்கனிகளில் பார்ப்பிக்யூகளைப் பயன்படுத்த வேண்டாம்

பால்கனிகளில் கேஸ் பாட்டில்களைச் சேமித்து வைக்க வேண்டாம்

புகை அலாரம்கள் மூடி வைக்கப்படவில்லை அல்லது துண்டிக்கப்படவில்லை என்பதையும், மாதந்தோறும் சோதிக்கப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும். ஒன்பது-வோல்ட் பேட்டரிகளை ஒவ்வொரு வருடமும் மாற்றவும். 10-வருட லித்திய பேட்டரியுடன் புகை அலாரம்களுக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்கவும்.

பால்கனிகள், ஹால்வேக்கள் மற்றும் வெளியேறுவதற்கு வழிகளை குப்பையின்றியும் சுத்தமாகவும் வைத்திருக்கவும். உங்களிடம் வெளியேற்றத்திற்கான திட்டம் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

துணிகளையும் பிற பொருட்களையும் ஏர்கன்டிஷனிங் யூனிட்டுகளிலிருந்து குறைந்தது ஒரு மீட்டர் தூரத்திற்கு தள்ளிவைக்கவும்

VICTORIA

https://www.vic.gov.au/cladding-safety